உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை

வன்னியும், கிணறும், இலிங்கமும், அழைத்த சரித்திரம்.

புதுக்கோட்டைச் சமஸ்தானம்

வேகுப்பட்டி,

திருவாளர்,

பெரி. இலக்குமணச் செட்டியாரால்

இயற்றப்பெற்றது.

வெளியிட்டோர்

இரங்கோன், தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்தார்.

இதன் விலை அணா ௬.

கலி, ௫௰௩ உயி அ.

உ

சிவமயம்.

வேலுமயிலுந் துணை.

இரங்கோன் தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்தாரால் மூன்றுவதாண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு திருவிளையாடற் புராணத்தின் கண்ணுள்ள "வன்னியும் கிணறும், இலிங்கமும், அழைத்த படலம்" எனப்பெயரிய இச்சரிதத்தை அக்ஷய ஆண்டு ஆவணித்திங்கள் ஆறும் நாள் நாடகவாயிலாய் நடாத்திக்காண்பிக்கப் பெற்றகாலையில் இளைஞர்களால் பாடப்பெற்ற கீதங்கள்.

முன்னுரை.

கண்ணியமிருந்த புண்ணியசீலர்களே!

எல்லாம்வல்ல இறைவன் திருவிளையாடல்களுள் அறுபத்து நான்காவது திருவிளையாடலாகிய, "வன்னியும், கிணறும், இலிங்கமும்," அமைந்தபடலத்தை இந்நூலில் சரித்திர வடிவமாக, முற்கால இராக தாளங்களானும், தற்கால நூதனமுறைகளானும், அமைத்திருக்கின்றேன். சரித்திர ஆசிரியர்களும், கவிவாணர்களும், நிறைந்த இவ்வுலகத்தில் கல்வி, அறிவு, சங்கீதம், முதலியவற்றிற் சிறிதும் அநுபவமில்லாத யான் இயற்றியுள்ள இந்நூலில் சொற்குற்றங்கள், பொருட்குற்றங்கள் மலிந்துகிடக்கலாம். என்னை அறிந்தோ அறியாமலோ அத்தகைய குற்றங்கள் இந்நூலில் வந்திருப்பின்,

"குற்றங்களைந்துங் குணமணிந்துங்கொள்ளுதல்
கற்றறிந்த மாந்தர் கடன்"

என்ற முதுமொழிக்கொப்ப, குற்றத்தையகற்றி குணத்தை மட்டிலுங்கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளுகின்றேன்.

இரங்கோன்,
அகூஉப ஆண்டு, ஆவணித்
திங்கள், உ௰கூஆம் நாள்.

இங்ஙனம்,
பெரி. இலக்குமணன்.

குறிப்பு:— திருவிளையாடற்புராணச் செய்யுட்களில் இக்கதை நிகழ்ந்த சில இடங்களின் பெயர்களும், கதாநாயகர்களின் பெயர்களும் கூறப்பெறாமையால் அவைகளைத் தற்காலத்துக்கேற்ப இந்நூலில் அமைக்கப்பெற்றிருக்கின்றன.



பெரி. இலக்குமணச் செட்டியார்.

உ
சிவமயம்.
வேலுமயிலுந்துணை.

வன்னியும், கிணறும், இலிங்கமும், அழைத்த சரித்திரம்.

சித்தி விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

வன்னியும் பொற்கிணறும் மாவா ரிலிங்கமுநற்
றென்மதுரைக் கன்றழைத்த சீர்புகல—முன்னிற்கும்
கந்தனுக்கு முன்னோன் கவினுறையுஞ் சித்திமதத்
தந்திமுகன் தண்மலர்ப்பொற் றாள்.

கலைமகள் துதி.

உ. அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வானிருக்கும் முகிலினங்கட் கிறைவனொடு மரும்பெருமை வாய்ந்த தேவர்
கோனிருக்கும் மாதலமும் பூதலமும் புகழ்ந்தேத்துங் கூட லிற்பெண்
மானினுக்காய் வன்னியுநற் கிணறுமிலிங்கமு மழைத்த மகிமை செப்பத்
தேனிருக்குஞ் செழுமலர்த்தாட் கலைமகளி னடியிணைகள் சிந்தை சேர்ப்பாம்.

(பூர்வம் காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகமரபிலுதித்த தனபதி என்பவர் தன் மனைவி குணவதியுடன் புத்திரப்பேறில்லாமையைக் குறித்துச் சம்பாஷித்துக்கொண்டிருக்கும்பொழுது குணவதி தன்புருடனை நோக்கிக் கூறுதல்.)

---

3. இராகம் நங்யாசி தாளம் ஆதி.

(பல்லவி)

புத்திரப்பேறில்லாமல் இத்தரணியிலென்ன
போகமுண்டு என்னுதா (புத்)

(சரணுநுபல்லவி)

பத்துமாடிகளுள்ள சித்ரவீடிருந்தாலும்
நத்தும்பொன்னணிநகை முத்துக்களுறைந்தாலும் (புத்)

சுற்றத்தார்கள் சிநேகர் சொல்லும் ஏவல்புரிவோர்
மற்றப்பொருள்கள்யாவும் வாய்க்கப்பெற்றிருந்தாலும் (புத்)

ஆடுமாடுகள் என்றும் அழியாப்புகழ்ற்றாலும்
நீடும்புனலேரிசென் னெல்வயல்களிருந்தாலும் (புத்)

அம்புவிமுழுவதும் அரசுபுரிந்திட்டாலும்
உம்பர்களுங்கொண்டாட உயர்ந்துவிளங்கிட்டாலும் (புத்)

பாடும்லக்ஷ்மணன்றமிழ்ப் பரவுமிவ்வுலகின்கண்
கோடிகோடியாய்ப்பபணங் குவிந்துகிடந்திட்டாலும் (புத்)

(தனபதி குணவதியை நோக்கிக்கூறுதல்.)

4. இராகம் நந்யாசி தாளம் ஆதி.

(பல்லவி)

காதற்கனிரசமே கானமடமயிலே.
கண்மணி வருந்தாதே (கா)

(சரணுநுபல்லவி.)

பூதலந்தனில்நம்மைப் புத்திரப்பேறில்லாத
பாதகர்கள்என்றேதப் பாவமென்புரிந்தோமோ (கா)

மறையினைப்பழித்தோமோ மன்னரைத்தூஷித்தோமோ
திறன்கெழுமாதவத்துச் சீலரையேசினோமோ (கா)

ஆதியிலேநமக்கு அன்னவாகனனெனும்
வேதன்விதித்தபடி மெய்யாகவேநடக்கும் (கா)

வாழும்மதுராபுரி மணிநீலகண்டன்பதம்
நாளுந்துதிப்போமாயின் நம்மிஷ்டம்பூர்த்தியாகும் (கா)

(இறைவனின்றிருவருளால் இவர்கட்கு ஓர் பெண்மகவுபிறக்க அம்ம கற்கு ஞானம்பிகை என்றுபெயர்வைத்துச் சீராட்டிப் பாராட்டி வளர்த்து வந்தனர். பெண் பருவகாலமடைந்தனள். ஒருநாள் தன்தோழியுடன் நந்த னைத்தில் உலவிவரும்பொழுது தோழியாகிய நீலாம்பாள், ஞானம்பி கையைநோக்கி நந்தவனச் சிறப்பைப்பற்றிக் கூறுதல்.)

விந்தையாய்த்தோணுதிந்தரண்மனையில்
என்ற மெட்டு.

5. இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

இந்தமாநந்தவனத்தின் பெருமை — இங்குநா
னிசைப்பேனெழிலி னுரிமை
தந்தமார் தாரினங்கள் செழுமை — எங்குமே
தன்னொன்றிலங்கு மருமை. (இந்)

சந்திரனுதயமாகுங்காலம் — அதோபார்
தாவுங்கிள்ளையின் கோலம்
செந்திரைசூழுங்கடலின்ஞெலம் — நற்சுகஞ்
சேருந்தென்றலின் காலம். (இந்)

மந்திரவாடா மல்லிகைரோஜா — எழிலுறு
மலரின்சபைக்கு ராஜா
கந்தமந்தாரைப்பிச்சி கூசா — நறுமணங்
கமழுஞ்சண்பகந் தேசார். (இந்)

உன்னதமான பளிங்குக்கூடம் — அழகுமிக்
கோங்குமணிப் பொற்பீடம்
பொன்னினக்கிள்ளையினங்கள் பாடம் படிக்கும்
புதுமையமைந்த மாடம். (இந்)

வந்தெழிலோங்குஞ் சந்தனத்தாரு— இதற்கிணை
யெங்குமிலை நீ பாரு
மாந்தளிரினத்தினுரிய சீரு — இங்குநீ
மகிழ்ந்துளந்தன்முன் கூறு. (இந்)

மந்தமாருதமளிக்கு நீதம் — செந்தூர்வாழ்
வள்ளி லோலன் பாதம்
சொந்தமாய்ப்பணியும் லக்ஷ்மணன்கீதம்—இவ்வனச்
சோலையொலிக்கும் நாதம். (இந்)

(ஞானம்பிகை. தோழியைநோக்கி நந்தவனச் சிறப்பைப்பற்றிக் கூறுதல்.)

காக்ஷி கண் காக்ஷியே என்ற மெட்டு.

6 இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் ஆதி.

(பல்லவி)

சோலைச்சிங்காரமே சொல்லவெகு கம்பீரமே. (சோ)

(அநுபல்லவி.)

மாலைக்காலமானநல் வேளையிந்தநேரமே. (சோ)

(சரணங்கள்)

காலையிலும் மாலையிலுங் கண் கவர்நல் வண்டுகள்
களித்துப்பண் பாடும்ரோஜா மல்லிகைப்பூத் துண்டுகள்
கம கமவென்றடிக்கும் அமேரிக்காச் செண்டுகள்
கந்தம்பூ சியுலவுங் கன்னியர்க்குத் தொண்டுகள்
சொந்தமாய்ச் செயுந்தோழியர் கூட்டம் அதைச்
சுற்றிலும் பூங்கிள்ளைகளார்ப் பாட்டம் முழுச்
சந்திரனுதய கால நாட்டம்
சப்திக்கும்பொற்குருவி ஜலஜலெனுமருவி
அற்புதங்கள்பெருகி யாடுமயில்மருவுஞ் (சோ)

தேன்றுளிக்குஞ் செந்தாம ரையாம்பல்நீரோடையே
சேருங்கவலையெல்லாம் மாறந்தென்றல்வாடையே
செய்யபரிசுத்தமாய்த்திகழு மன்னப்பேடையே
சேர்ந்து களித்து விளையாடுஞ் ஜோடிக்காடையே

ஆர்ந்தவிந்தப்பூங்காவனப்பெருமை ஆதி
சேஷனுஞ் சொல்லவொண்ணு அருமை புகழ்
வாய்ந்த நறுந்தாரினங்கள் செழுமை

வளையும் பலரோட்டு
மணிப்புற் கம்பிக்கேட்டு
கலையுறை தென்னுட்டுக்
கவிலக்ஷ்மணன் பாட்டு. இச் (சோ)

—❧—

(ஞானம்பிகையின் தாய் தந்தையர் ஞானம்பிகையை மதுரையம் பதியில்வாழ் தம்மருகனை கருணகரனுக்கு மணமுடிப்பதாய்த் தீர்மானித்திருந்தனர். சின்னுட்கழிய தனபதியுங் குணவதியும் விண்ணுலகெய்தினர். அவ்விஷயத்தைத் தனபதியின் சுற்றத்தார்கள் மதுரையம்பதிவாழ் கருணகரனுக்கு கடிதத்தின் வாயிலாய் அறிவித்தனர். கருணகரன் அக்கடிதத்தைக்கண்டு தனபதியும், குணவதியும், இறந்தமைக்காக வருந்துதல்.)

கடிதம் அகவற்பா.

வெண்டிரைக்கடல்சூழ் வியனுலகினிலே
பண்டையநகலனைலாங் கொண்டுவிளங்கும்
தேவார்பெருமைச் சீர்கெழுபுரமாம்
மாவார்கடல்செறி வண்காவிரிப்பூம்

பட்டினம்வாழுஞ் செட்டுடைவணிகர்
குலத்தினிற்சிறந்த குணத்தினன்தூய
தனபதிசுற்றந் தார்வரைநிருபம்
மலைமகள்கொழுநன் கலைமதிசூடும்
எல்லாம்வல்ல இறைவனிவ்வுலகில்
திருவிளையாடல் புரியணிகூடல்
வாழ்கருணாகர மகிபன்காண்க
உனதருந்தாயோ டினிதுடன்பிறந்த
தனபதியென்னுந் தண்ணளியாளன்
மன்னினைத்துறந்து விண்ணுலகெய்தினன்
அத்துயராற்று மற்குணவதியும்
மாண்டனள்பின்னரு மைமாமனுடன்
அன்னார்கிரியைக ளனைத்துமுடித்தனம்
நீயிவணுற்று நினதருமாமன்
பெற்றநற்கோதை நற்றவப்பேதை
ஞானம்பிகையை நன்மணமுடித்து
தனபதிபொருளெலா நினக்குரிதாக்கி
ஏகுதல்கடனே ஏகுதல்கடனே
இவ்வினைமுடிக்க ஈண்டுநீவிரைவில்
வருக வருக மனம்வருந்தற்க

அடைக்கலமே என்ற மெட்டு.

8\. இராகம் ஆரபி தாளம் ஆதி.

(பல்லவி.)

தனபதியே தனபதியே
தாயினுடன்பிறந்த
தூயகுணமமைந்த (தன)

(சரணுநுபல்லவி)

கனதனப்பொருள்களுங் காணியுந் துறந்து
கன்னியிருமைஞானம் பிகையையுமறந்து
மனைவியுடனேதேவர் மணிநாடுபுகுந்து
வாழ்ந்திடப்போயினையோ மாமாநீசிறந்து (தன)

இல்லையென்றோர்களுக்கு இல்லையென்றுரையாய்
எழில்சிவபக்திஞான வழிதெரிமறையாய்
சொல்லரும்வணிகர்கள் குலத்தினில்நிறையாய்
துரிதஅலைகள்நிறை திரைசெறிதரையாய் (தன)

—※※—

(கருணைகரன் காவிரிப்பூம்பட்டினம்வந்து ஞானம்பிகையைக்காணல். ஞானம்பிகை வருந்துதல்.)

சாந்தமுலேக என்ற மெட்டு.

9. இராகம் சாமா தாளம் ஆதி.

(பல்லவி.)

ஐயோ நானென் செய்வேன்
அடியாள் எவ்வாறுய்வேன்
அருமைசேர் என்மைத்துனரே. (ஐ)

(சரணுநுபல்லவி.)

துய்ய என்தாய் தந்தை வையகத்தைத்துறந்து
பையோக அரவணி பரமனடியிற்சேர்ந்தார். (ஐ)

அடியாள் இனியென்செய்வேன் அந்தோ எப்படி உய்வேன்
படிமீதிலும்மையன்றி பாதுகாப்பவர் எவர். (ஐ)

தாயுந் தந்தையும்நீரே சகலசுற்றமும் நீரே
சேயிழையெனக்காக்குந் தெய்வங்கள்யாவும் நீரே. (ஐ)

—※※—

10. இராகம் காம்போதி தாளம் ரூபகம்.

(கன்னிகள்.)

ஞானம்பிகை:- அருமைமைத்துனவிந்தக் கொடுமைக்கு என்
செய்வே னந்தோ.

கருணைகரன்:- பிரியஞானம்பிகா நின்னறிவார்
மனமும்நோக லாமோ.

ஞான:- தந்தையையுமிழந்தேன் தாயாரையு
மிழந்தே னந்தோ.

கருண:- செந்தார்க்குழலிநீவ ருந்துவ
தாலென் இனி இங்கு

ஞான:- பெற்ற தாய்தந்தையரைப் பிரிந்தும்
உயிர்வாழ்கின்றேன் பேதை.

கருண:- கற்றும் அறிவில்லாமற் செப்பும்
உரைகளென்ன கோதே.

ஞான:- மண்ணிலிக்கொடுமைபோல் வாய்த்திருக்
காதெவர்க்கும் அந்தோ.

கருண:- பெண்ணே நாமென்ன செய்வோம்
முன்னாள்விதித்தபடி யாகும்.

(கருணாகரன் காவிரிப்பூம்பட்டினத்தில் சின்னாளிருந்து. தனபதி பொருளெல்லாங் கைக்கொண்டு மதுரையம்பதியில் மணம்புரிந்து கொள்வதாய்க்கூறி ஞானம்பிகையை அழைத்துக்கொண்டு மதுரைமாநகரைநோக்கி வரும்வழியில் ஓர்நாள் இரவு திருப்புறம்பயமென்னும் ஊரில்தங்கி அங்குள்ள ஆலயத்தில் சுவாமிதரிசனஞ்செய்து அன்றைய இரவு அவ்வாலயத்தின் முன்னர் ஞானம்பிகையும் கருணாகரனும் மற்றையோருந்துயின்றனர். அஞ்ஞான்று ஓர் கொடியவிட அரவம்வந்து கருணாகரனைக் கடித்துவிட்டது. அவ்வமயம் கருணாகரன் கூறுதலும், ஞானம்பிகை கூறுதலும், கீழ்வருமாறு இப்பாடல் புதிதாய்ச்சேர்க்கப்பெற்றது.)

---

11. இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

கருணா:- சுந்தரியே எந்தன் ஆவி சோர்ந்துமிக வாடுதையோ
இந்தவிதிக்கென்னசெய்வேன் எழிலார்மடமயிலே.

ஞானா:- அன்புள என்மைத்துனரே ஆவிசோருங்காரணமென்
இன்புடனே எந்தனுக்கு இயம்புவீர் உண்மையாக.

கருணா:- சிலம்புள என்னருமைக் காதல்நிறை சேயிழையே
காலவிட நாகமெனைக் கடித்ததால் நேர்ந்ததிது.

ஞானா:- ஆ! இதற்கென்ன செய்வேன் ஆரிடத்திலேபோய்ச் [சொல்வேன்
தேயமெதோநானறியேன் தேவாநின்பாதந்தஞ்சம்.

கருணா:- மயக்கந்தலைக்கேறுதந்தோ வண்விழிசுழலுதந்தோ
இயக்குமெந்தன் அங்கமெல்லாம் இயங்காதொழிந்த [தந்தோ.

ஞானா:- காதலரே உம்மையன்றிப் பூதலத்திலுற்றதுணை
ஏதுமில்லையெனைப்பிரியின் இன்றே உயிர்துறப்பேன்.

(கருணாகரன் விடஅரவால் உயிர்நீத்ததும் ஞானம்பிகை புலம்பல்.)

தசரதராஜகுமாரா என்றமெட்டு.

12. இராகம் இஸ்துஸ்தான் காபி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

வணிகர்குலத்தின் னவமணியே செழுங்கனியே.
பேதையினியே வாழ்வதெங்ஙன்
அணிகொழுநதிரா அடியார்க்குதாரா
அங்கஜனும் நாணுஞ்சிங்காரா
பொற் குபேரா
கண் பாராய் அடியாள்மீது. (வணி)

பாழுமரவந்துடி துடித்து உமைக்
கடித்து உயிர்
குடித்துப் பண்புற்றதோ
சூழுமென்வினையோ துயர்செய்கற்பனையோ
தொல்லுலகிலெனக்கு யாரு துணை
கூறு சிறு
தேறு தல்சொல்லவே. (வணி)

தண்ணுறையுந்தென்கூடலூரா நற்கம்
பீரா பொற்கு
பேரா கடங்கடல்சூழ்
கண்ணகல்சிறந்த மண்ணினைத்துறந்து
விண்ணவர் நாட்டுக்குச்சென்றாயோ என்னன்
பேயோ துன்
பாரும் விடஅரவால். (வணி)

உமைப்பிறிந்துநானினி வாழேன் மனந்
தாழேன் வினை
யூழின் னுடன்வருவேன்
ஆரார்கொண்டாடும் அருட்கடலமுதே
அண்டினோரைக்காக்கும் நல்லிறையே இன்பத்
திறையே மனக்
குறையே அகற்றிடுவாய். (வன்னி)

எந்தன்முன்னோர்கள் செய்தபவமோ கொடுந்
தவமோ விதி
வசமோ இங்குற்றது
சந்திரப்ரகாசா தண்கூடல்வாசா
மைந்தன் லக்ஷ்மணன் சொல்லின்தாசா ஜக
நேசா வுமை
நேசா மலரடிசேர். (வன்னி)

(ஞானம்பிகை புலம்பிக்கொண்டிருத்தலைக்கேட்டு அடியார்களுடன் திருஞானசம்பந்தர் அவண் வந்துவினவுதல். ஞானம்பிகை தன்வரலாறு கூறி முறையிடல்.)

13. இராகம் சகானா தாளம் ரூபகம்.

(கண்ணிகள்.)

ஞான:- அருமாமறையுணர்ந்த ஐயநின்பாதந்தஞ்சம்
இருமாநிலமும்போற்றும் எழிலார்ஞானதேசிக. (அ

திருஞா:- மாதேயிவ்விடத்தில்நீ வாய்விட்டலறுவதேன்
கோதில்லாமலேயென்முன் கூறுய்மடமயிலே

ஞானு:- திருவார்என நாகாதல் செல்வமைத்துனரிங்கு
அரவங்கடித்ததனுல் ஆவிதுறந்தாரைய

திருஞா:- உந்தன்மைத்துனனென்ருல் நின்னூரெவ்விடமுண்டு
சொந்தத்தாய்தந்தையாவர் இந்தமைந்தனுமெவ்வூர்.

ஞானு:- 1. காவிரிப்பூம்பட்டினம் கனத்தவணிகர்குலம்
தாதைதனபதியாம தாயார்குணவதியாம்

2. புத்திரப்பேறில்லாது மெத்தப்பக்திபுரிந்து
சித்திரப்பாவையெனைப் பெற்ருர்பன்னுட்கழிந்து

3. என்னைத்தம்மருகற்கு எழிலார்மணமுடிக்க
முன்னேநிட்சயஞ்செய்து பின்னுண்மறித்தாரன்னே
[ர்

4. மதுராபுரியில்வாழென் மைத்துனரவண்ணுற்று
நிதியனைத்துக்குமதி பதியாய்ச்சின்னுட்கழிய

5. மாமதுரையிலெனை மணம்புரிகுவேனென்று
தாமுடனெனைக்கூட்டித் தன்னூரிவ்வழிவர

6. மறுவில்இவ்விடந்துயில் புரியும்பொழுதஎந்தன்
மைத்துனரின்னுயிர்க்கு வந்தான்கொடியகாலன்

7. தாயைப்பறிகொடுத்தேன் தந்தையையுமிழந்தேன்
நேயவருமைக்காதல் தூயோனையுமிழந்தேன் (அ)

—⁂—

(ஞானம்பிகையின் துயருக்கு இரங்கி திருஞானசம்பந்தர் கருணாகரனை. உயிர்ப்பித்தல். இப்பாடல் புதிதாகச்சேர்க்கப்பெற்றது,)

14. கட்டளைக்கலித்துறை.

தண்டாமரையான் சாகரந்துயிலுந்தனித்திருமால்
அண்டாதிதேவரடிபணிந்தேத்து முருநட்பரனே
வண்டாடுமீண்டு அரவான்மடிந்த விம்மைந்தனுயிர்
கோண்டே எழுக வருள் சுரப்பாயிந்தக்கோவிலிலே.

(கருணாகரன் உயிர்பெற்றெழுந்ததும் ஞானம்பிகையுடன். திருஞானசம்பந்தரின் மலரடிகளில்வீழ்ந்து வணங்குகிறான். பிறகு, சம்பந்தரின் கட்டளைப்படி வன்னியும், கிணறும், இலிங்கமும், சாக்ஷியாக் ஞானம்பிகையை கருணாகரன். அவ்விடத்தில் மணம்புரிந்துகொண்டு. மதுரையம்பதியைநோக்கி வருகிறான். நகர் கண்களுக்குப்புலனானதும். மதுரைமாநகரின் விசேஷங்களைப்பற்றி ஞானம்பிகைக்குச் சொல்லுகிறான்.)

முருகன் றிருமால் மருகன் பெருமை என்றமெட்டு.

15. இராகம் அடாணு தாளம் ரூபகம்.

(பல்லவி.)

மானே அதோ பார் மதுராபுரியே எந்தன்
மையல்தனக்கிசை
தையலே ஆருயிர் (மானே)

(அநுபல்லவி.)

மீனாக்ஷிசொக் கேசர்கோயில்ஸ்தூபி
விகசிதமுடன் றெரிவதையெழில்
புகக்கனிவுட னறிவாயடி (மானே)

(சரணங்கள்.)

அறுபத்து நான்கு திருவிளையாடல்கள்
ஆடியது மிந்த நகரம் அதோ
அம்பொன்மணிமுடி யோடுதோன்றுதல
முகியநான்குபொற்சிகரம்
ஆடும்பொன்னம்பல நாதசங்கீதம்
ஆயிரக்கான்மண்ட பத்தின்விநோதம்
தேடும்பொற்றாமரை வாவியின்னீதம்
தெரிவாயடி விரைவாகவே
மருவார்மல ருறுசீறடி. (மானே)

முன்செய்ததீவினை யெல்லாமழிக்குநன்
மோக்ஷவைகைநதியுண்டு அந்தத்
தென்மதுராபுரி யோரத்திலேயெந்தன்
சேயிழையேகளிகொண்டு
மன்னரின் செங்கோல்வளர் பாண்டிநாடு
மாண்புறும்வேலூர் மணி நகர் வீடு
நன்னயமார் லக்ஷ்மணன்றமிழ்ப்பாடு
நகைமாமதி முகசேகரி
சுகவாரிதி யெனதாருயிர். (மானே)

(கருணாகரனும், ஞானம்பிகையும், மதுரையம்பதியில், தம்மாளிகையை யடைதல், கருணாகரனின் மூத்தமனைவியாகிய கமலாக்ஷி, இருவரையும் வரவேற்றல், பன்னாட்கழிந்தன, ஞானம்பிகைக்குப் புத்திரப்பேறுண்டாகி ஓர்ஆண்குழந்தையை யீன்றனள். அக்குழந்தைக்கு எழுவயது நிறைந்தது. ஒருநாள்கமலாக்ஷியின்மகன் கருப்பையனும், ஞானம்பிகைமகன் புண்ணியமும், தெருவில் விளையாடவந்தனர்.)

16. இராகம் சங்கராபரணம் தாளம் ஏகம்.

(கண்ணிகள்.)

கருப்:- தம்பி நீ யின்று நா மிருவருங் கூடியே
சந்தோஷ மாய் விளையாடுவோம்ஓடியே.

புண்ணி:- அண்ணா நா மிவ்விடம் ஆடுவோம் கோலியே
முன்னேநான்வென்றிடின் செய்குவேன் கேலியே.

கருப்:- கோலியையார்முதல் ஆடுதல் கூறுவாய்
சீலமாயெப்பொருள் பந்தயம்போடுவாய்.

புண்ணி:- பந்தயம் எந்தனிச் சொந்த நற்கோலியே
முந்துறவென்றவர்கள் பலசாலியே.

கருப்:- இதோ எந்தன்கோலியினாலே எடுப்பேனுன்காய்
பார் பார் பார்.

புண்ணி:- அதோ எந்தன்கோலியினாலே அடித்தேனுன்காய்
பார் சீர் பார்.

(இரண்டு சிறுவர்களும் விளையாடிக்கொண்டிருக்கும்பொழுது சண்டைஏற்பட, கருப்பையன் புண்ணியத்தை அடித்துவிடல், புண்ணியம் அழுதுகொண்டு தாயிடம்வந்து முறையிடல்.)

நொண்டிச்சிந்து மெட்டு.

17. அம்மாஒரு சேதிசொல்ல உந்தன்
ஆணைதரவேண்டுகின்றேனடியனுக்கு

பொல்லாத கமலாக்ஷி மகன்
பொய்புரைபுகல்கருப்பையனென்பான்
பிடித்தெனை யடித்தனனே அந்தப்
பேயனுரைத்தவசைகூறப்போமோ
இல்லாததெல்லாஞ் சொல்லி மனம்
எங்கும்படிகாரத்தைஓங்கிக்குத்தினன்
பாரக்காலினை லுதைத்தான் யான்
பதைத்துஉனைநினைத்துவோடிவந்தேன்
அந்தக்கருப்பன் தாயும் மகனை
அடக்குவாளென்றுநான்நினைக்கவில்லை
தந்தையிடத்திற் சொல்லி அவனைத்
தண்டிக்கவேணுமிப்போகண்டிதமாய் (அம்)

(ஞானம்பிகை, கருப்பையனுக்குப் புத்திமதிகூற, கருப்பையன் தன் தாயிடஞ்சென்று ஞானம்பிகைமேற் கோபமுண்டாகுமாறு கூறுதல், அதைக்கேட்ட கமலாக்ஷி, கோபாவேசமாய் ஞானம்பிகையுடன் சண்டையிடல்.)

சேமமுற்றசெந்தின்மாநகர் என்றமெட்டு.

18. இராகம் இந்துஸ்தான் பியாக் தாளம் சாப்பு.

(கண்ணிகள்.)

கமலா:- சீருளெங்களினற் பேரைமாற்றவந்த
சேடியே குடிகேடியே முழுமூடியே உனைச்
சேர்த்ததாலன்றோநீ ஆர்த்துப்பேசுகிறாய்
ஆடியே ஈகம்பாடியே.

ஞானு:- கோரரூபமாயென் னேரில்வந்தழைத்த
கோதையே யான்செய்தீதையே சொல்லிப்போதையே மிக்கக்
சுக்குரல்செய்தெனை நோக்கும்பார்வைமன
வாதையே கொள்வேன்பேதையே.

கமலா:- மோசக்காரி மிக்கரோஷக்காரிபோலப்
பேசுராய் கையைவீசுராய் மிக்கஏசுராய் சின
மூளவேயுனையென் காலினுலுதைப்பேன்
பாரடி கொடும்போரடி.

ஞானு:- ஆசைக்காரிகுல நாசக்காரியுந்தன்
பாசமே பெருமோசமே ஆபாசமே எனை
அண்டிவந்தாலுந்தன் கொண்டையானகருங்
கேசமே போகுநாசமே.

கமலா:- எந்தஊரில்நீ பிறந்தையோகுலமும்
என்னவோ இங்குஉண்ணவோ நாசம்பண்ணவோ வந்தாய்
சொந்தமானவுந்தன் தந்தையாரெத்துணைப்
பேரடி பதில்கூறடி.

ஞானு:- சந்தைதோறும் விற்கும்சொந்தமானபொருள்
நீபடி அல்லநானடி பெரும்வாயடி அடித்துத்
தாவியென்முன்னறை கூவியேவரும்நீ
பேயடி கெடுவாயடி.

கமலா:- தானைசேனைசுற்றத் தார்களோடுமணங்
கண்டையோ விருந்துண்டையோ களிகொண்டையோ தமிழ்ச்
சங்கமாமதுரை மங்கைமீனுள்கோவில்
சென்றையோ அன்புவிண்டயோ.

ஞாஞ:- ஞானமார்க்கஞ்சிறி தேனுமேயிலாத
நாரியே பழிகாரியே மகாமாரியே வேலூர்
நண்பன்லக்ஷ்மணன்சொல் லின்புறுஞ்செந்தமிழ்
வாரியே கேளன்பூறியே.

—※—

சரசக்காரமாமா என்ற மெட்டு.

19. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

கமலாக்ஷி:— (விருத்தம்.)

முடியறுப்பேன் எங்களருங்குலமதனைக்கெடுக்கவந்த
முளரிப்பாத

வடியறுப்பே னெந்தனரும்மைந்தர்தமைத்தூஷித்த
வடங்காநாக்கின்

அடியறுப்பே னிவ்வுலகில்ஆடவர்கள்தமைமயக்கித்
துயர்செய்வேசை

நடியறுப்பேனுந்தன்முக நகையுடைப்பேன்வந்தவழி
நடந்துபோடி.

(பாட்டு.)

குடி. கெடு சதி காரி மலைக்
குறவர்கள்குல நாரி வீட்டுப்
படியில்வந்தூநீ ஏறி பந்த
பதைத்துப்பேசுராய் சீறி சீ (குடி)

ஞானம்பிகை:- (விருத்தம்.)

உன்மைந்தனென் மகனோடுறவாடி விளையாடு
மொருநேரத்தில்
நின்மைந்தன்மிகச்சீறி யென்மகனையடித்ததனால்
நெறியிற்கெட்ட
துன்மைந்தன்றனக்கு நறும்புத்திமதியுரைத்ததனாற்
றோஷமென்னே
பொன்மைந்தன்றனக்காக வெனைப்பழித்தவுனதரும்வாய்
புழுத்துப்போமே.

(பாட்டு.)

வாயில் வந்த வா றேசி எனை
வருத்துராய்மனங் கூசி நின்
சேயர்கட்கு நல்லாசி நான்
செப்பினேனடி தோசி சீ (வா)

கமலாக்ஷி.- (விருத்தம்.)

இல்லாதஜகஜ்ஜாலப் புரட்டெலாமிகத்தெரிந்தா
யிலங்கும்வேதஞ்
சொல்லாதமறையொன்றுந் துப்த்துணர்ந்தாயுலகமறிற்
றோன்றுமாந்தர்
கல்லாதகல்வியெலாங் கற்றுணர்ந்தாயின்றேலென்
கணவனூருன்
பொல்லாதமாய்கையிலே சிக்குவரோமதிகெட்ட
புலைச்சிபோடி.

(பாட்டு.)

கணவனுடன் கூடி நீ,
கடிமணஞ்செய்தாயோடி நன்
மணமகள்போல நாடி இங்கு
வந்தாயோமுழு மூடி என் (கண)

ஞானம்பிகை:- (விருத்தம்.)

எனக்கரியதந்தையுடன் பிறந்தாளீன்றெடுத்தபுக
ழோரார்மைந்தர்
உனக்கென்னசொந்தமடி உயர்விலாப்புன்மொழிக
ளுரைத்துவெந்தன்
மனக்கவலைதனைப்பெருக்கும் வஞ்சகியேயெனதுயிர்
மணாளன்றன்னை
இனிக்குநறுமணமுடித்தே யிங்குற்றேனிதுவுண்மை
யிறைவன்போல்.

(பாட்டு.)

வார்த்தையைக்கொஞ்சம் அடக்கு நீண்ட
மணிக்கையையினி முடக்கு எழில்
சேர்த்துநற்பத மடுக்கு நம்
சேயன்லக்ஷ்மணன் தமிழ்க்கு நீ (வா)

20 இங்கிலீஷ் நோட்டுமெட்டு.

கமலாக்ஷி:— சாக்ஷி யெங்கே

ஞானம்பிகை.— புறம்பயத்தில்

கமலாக்ஷி:— யார் மனிதர்களா அவர்கள்

ஞானம்பிகை;— அன்று வன்னி கிணறி லிங்கம்

கமலாக்ஷி:— மரங் கிணறி லிங்கஞ் சாக்ஷிகளாமோ

ஞானம்பிகை:— மணம்புரியிடத்துறை காக்ஷிகளாமே

கமலாக்ஷி:— அவை யிங்கு வந்தாலொப்புவேன்

ஞானம்பிகை:— இதற்கென்ன பதில்செப்புவேன்.

(ஞானம்பிகை சொக்கநாதர் திருக்கோயில்சென்று முறையிடல்.)

அடைக்கலமே என்ற மெட்டு.

21. இராகம் ஆரபி தாளம் ஆதி.

(பல்லவி.)

அடைக்கலமே அடைக்கலமே
அணிமதுராபுரி நன்
மணி சொக்கநாதனேநின் (அடை)

(சரணநுபல்லவி.)

படைக்குந்தொழிலோன் சிரம்பதித்ததிவ்விதியோ
பாவையென்முன்னோர்செய்த பழவினைச்சதியோ
கிடைக்காவிவ்வுலகப் பேராசையின்மதியோ
கிணறுவன்னிலிங்கம்முன் மணஞ்செய்தகதியோ. (அடை)

கருவினங்களார் திருப்புறம்பயக் காக்ஷி
தனிலெந்தன் மணவினைக்கினிய நற்சாக்ஷி
உறினிங்குவழைக்குமாறேறினள் சூக்ஷி
உறைந்தவெந்தனின் மூத்தாள்கொடுங்கமலாக்ஷி. (அடை)

கோமகப்பாண்டியன்மகள் மணந்தவனே
கூத்தாடியாகச்சபைதனில் நடித்தவனே
மாமனுகமுன்வந்து வழக்குரைத்தவனே
மைந்தன்லக்ஷ்மணனின் செந்தமிழ்க்கினியவனே. (அடை)

—✤—

(ஞானம்பிகையின் குறை தவிர்ப்பான், இறைவனருளால் வன்னியுங் கிணறுமிலிங்கமும் சாக்ஷிகளாக, மதுரைக்கோவிலில் தோன்றின, அதைக் கண்டு மூத்தாளாகிய, கமலாக்ஷி ஞானம்பிகையின் தெய்வீகத்தன்மைக்கு அஞ்சித் தான்செய்த குற்றத்தை மன்னிக்குமாறு வேண்டினள். ஞானம்பிகை அவ்வாறே மன்னித்தனள். வெளியூர்சென்றிருந்த கருணாகரன் மதுரைவந்ததும் தன் குடும்பத்தில் நடந்த அற்புதங்களைச் சுற்றத்தார்களால் கேள்வியுற்று ஞானம்பிகையைத் தூஷித்ததற்காகக் கமலாக்ஷியைக் கோபித்து, வீட்டைவிட்டு வெளியேகுமாறு கூறுதல்.)

முருகன் றிருமால் மருகன் பெருமை என்றமெட்டு.

22. இராகம் அடாணு தாளம் ரூபகம்

(பல்லவி.)

ஏனோ வுனக்கிந்தமதிவந்தது புக
ழெந்தன்குலங்கெட
வந்த கொடும் பாவி (ஏனோ)

வானோர்தொழும் ஞானம்பிகை
மணிமான்விழி மனமோகவே
துணிவாயிழி மொழிகூறின (தேனோ)

(சரணம்.)

தேனுறையும்பாண்டி நாட்டிற்கற்பினிலிச்
சேயிழைபோல்யாருமுண்டோ எழில்
வானுறையும் வன்னியுங்கிணறுலிங்கம்
வந்ததிங்குபுகழன்றோ
ஞானமில்லாத அறிவிலி செல்லாய்
நாடியெந்தன வீட்டுவாயிலில் நில்லாய்
மானோர்தொழும்மாதை வஞ்சகச்சொல்லால்
மதியாமலே பழிகூறின
சதிகாரியே கதியேதடி (ஏனோ)

(கமலாக்ஷியை, மன்னிக்குமாறு ஞானம்பிகை, கருணாகரனைவேண்டு தல்.)

மாற்றறியாதசெழும் பசும்பொன்னே என்ற மெட்டு.

23. இராகம் சுருட்டி தாளம் ரூபகம்.

(கண்ணி.)

மறுவிற்குறைவென்றுரைசை மன்றுறையிவ்வடியாள்
வழுத்தும்முறையொன்றினை மகிழ்ந்துகேட்டருளும்
திருவாரெனதாகற்பின் சீர்மையிவ்வுலகந்
தெரியச்செய்தவளிந்தச் சேயிழையன்றோ
அரியசோதரிகள்போல் நாங்கள் இருவர்
அன்பாயுமக்குத்தொண்டு இன்புடன்புரிவோம்
பிரியவென்தமக்கையா ளறியாமற்செய்த
பிழைகள்பொருத்தருளும் எழிலாளென்துரையே (மறு)

(கருணாகரன், ஞானம்பிகையின் நற்குணத்துக்கு மெச்சி கமலாக்ஷியைமன்னித்தல் அனைவருங்கூடிச் சந்தோஷகரமாய் மங்களம்பாடுதல்.)

மங்களம்.

24. இராகம் சௌராஷ்டிரம் தாளம் ஆதி.

(பல்லவி)

தேவார்சிங்காரமயிலோன் சேவடிக்கு மங்களம்திருத் (தே)

(அநுபல்லவி.)

மாவார்நன் மூவர்கட்கும்
காவலர்க்கும் மங்களம் திருத் (தே)

(சரணங்கள்)

பாவார் மதுராபுரிக்கும்
பைந்தார் வன்னியுங்கிணறுக்கும்
மூவாவிலிங்கத் துருவுக்கும்
மேவுஞ்சுபமங்களம் நிருத் (தே)

சீரார் தனவைசியர்கட்கும்
திருஞானம்பிகை கருணைகர்க்கும்
நேராயிதைப் படிப்போர்கட்கும்
நித்ய சுப மங்களம் நிருத் (தே)

பொங்குந் தனவைசியவிளைஞர்
சங்கத்தின் அங்கத்தினர்கட்கும்
மங்காநடராஜனடிக்கும்
மைந்தன் லக்ஷ்மணனின்மொழிக்கும்
எங்கும்முழங்குந் தமிழுக்கும்
தங்குஞ்சுபமங்களம் நிருத் (தே)

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

உ
சிவமயம்.
வேலுமயிலுந் துணை.

நாடகத்தின் இடை, இடையே, இளைஞர்கள் பாடிய கீதங்கள்.

தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்து நடராஜப்பெருமான் துதி.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வெண்டிரைக்கடல்சூழ் பூவின்மிகுபுகழிரங்கோன்வாழும்
பண்டையப்பெருமைவாய்ந்த பசுந்தனவணிகப்பாலர்
தண்டமிழ்ச்சங்கமோங்குந் தனிநடராஜன்பாதங்
கொண்டுநற்சிரமேலீண்டு கோதறும்பாக்கள்சொல்வாம்.

வனசாக்ஷி என்ற மெட்டு.

2. இராகம் இஸ்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

(பல்லவி.)

நடராஜா விடஅரவணிதிரு (நட)
நற்குலவிளைஞர் பொற்சபையில்வளர் (நட)
நாளுந்துயர்மாளு நலஞ்சூழும்பாலர்சங்கமுறும் (நட)

(சரணங்கள்.)

திடதனவணிக நல்லிளைஞர்கள்கூடி
இக்குலகினில் நறும்புகழ்பெறநாடி
இடாறும்பேரின்பக்கடல் குளித்தாடி
எங்குமேந லங்கணிசீர்
பொங்குநதமிழ்ச் சங்கம்வளர் (நட)

உனதெழில் நடியதை யுவப்புடன்காட்டு
உலகினிலிளைஞர்கட் கருண்மிகவூட்டு
கனமுறுந்தனப் பொருளினிதுறக்கூட்டு
கந்தனின்றந்தையேவேலூர்
மைந்தன்லக்ஷ்மணன்றுதிக்கும் (நட)

—❧❧—

இரங்கோன் ஆறறைமேன்மாடியில் திருக்கோயில் கொண்ட முருகக்கடவுள் துதி.

3. அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சீரோங்கு மிரங்கோனல்லாறறைமேன்மாடிதனிற்
திருக்கோயில்கொண்
டேரோங்குந்தனவணிக மரபினர்களெஞ்ஞான்று
மினிதாய்வாழப்
பாரோங்குமருள்நலனும் பொருள்நலனுங்கொடுத்துவந்து
பரிந்துகாக்குந்
தாரோங்குங்கடப்பமலரிளங் குமரன்றிருவடிகள்
தலைமேற்கொள்வாம்.

—❧❧—

பொன்னுலவும் என்ற மெட்டு.

4. இராகம் செஞ்சுருட்டி தாள ரூபகம்.

(கண்ணிகள்.)

ஆறுமுகமானமடி வேலா இரங்கோ
ஞறைமேன்மாடியுறுஞ்சிலா தொண்ட
ரண்டர்கள்கொண்டாடுமரன்பாலா வுந்தன்
அழகியதரி சனமதுதர
வழியருளுவாய் விரிமலர்செறி
அப்பொன்மணித் தண்கடம்பத்தோளா இந்த
அன்பனுரை செந்தமிழைக் கேளாய். (ஆறு)

சீர்பெருகுந்தனவணிகர் கூடி உந்தன்
திவ்யமுகத்தரிசனையை நாடி ஞானத்
திருப்புகழ்சங்கீதமுடன் பாடி நாளுஞ்
சேவித்திட மனமகிழ்வுடன்
மேவித்திரு வருண்மழைபொழி
சேவலனேயுன்னிருதாள் தேடி மைந்தன்
செப்புமுரைக்கேயருள்செய் நீடி. (ஆறு)

ஏர்மிளிருந்தேவர்குலக் கோனே வள்ளி
ஏந்திழைதெய்வானைமணாந் தோனே புவி
எங்குநிறைதுயகுண வானே வுந்தன்
இணையடிமல ரறுநினமுமென்
மனமதினினைந் திடவருள்புரி
யீசனுக்கும்வேத முரைத்தோனே நாளும்
நேசமுடன்லக்ஷ்மணன் சொல்வோனே. (ஆறு)

தனவைசிய இளைஞர் தமிழ்ச்சங்கத்தைக் குறிக்குங் கீதங்கள்.

5. அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நீர்வளமும் நிலவளமும் நெல்வளமும் நிதிவளமும்
நிறையும் நேர்மைப்
பார்வளமும் பதிவளமும் பலவளமுஞ் செறிந்தோங்கும்
பசியபைம்பொன்
ஏர்வளங்கொள் பார்மாவின் தலைநகராயிலைநத் தொளிரு
மிரங்கோனீகைப்
பேர்வளர்க்குந் தனவணிக விளைஞர்தமிழ்ச் சபையென்றும்
பெருகிவாழ்க.

—❧—

இந்தியாவிலிரண்டு என்ற மெட்டு.

6. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

1. மனதிற்கினியரெங்கோன் தனவைசியஇளைஞர்
மாதமிழ்ச்சங்கப்பெருமை—சொல்லுவேன்கேளீர்
வளர்க்குங்கொள்கையின்அருமை.

2. சீராருருத்ரோற்காரி செய்யவாவணிமூரி
திங்கள்நாளேழில்ஸ்தாபிதம்—செய்தாருலக
மெங்குங்கொள்ளவேசோபிதம்.

3. தண்டமிழுபிவிர்த்தி சைவசமயப்பக்தி
சாருமிளைஞர்முன்னேற்றம்—புலான்மறுத்தல்
சாதியபிமானத்தோற்றம்.

4. மாகில்லாதநற்குண தேசாபிமானமின்னும்
மருவிற்சற்குணமார்க்கங்கள்—முக்கியமான
உருவாஞ்சங்கத்திநோக்கங்கள்.

5. சோமவாரங்கள்தோறுந் நாமச்சண்முகநாதன்
சேமக்கோயிலின்முன்னின்று—அங்கத்தினர்செய்
நாமப்பஜனைபோநன்று.

6. உலகவிசேஷமெல்லாம் நிலவும்பத்திரிகைகள்
பலவுஞ்சேர்வாசகசாலை—அறிவுக்குநன்
னலனுண்டாக்கிடுமவ்வேலை.

7. சித்தஞ்சுத்தமடையும் முத்தமிழ்க்கள்நிறைந்த
புத்தகசாலைசங்கீதம்—இளைஞர்சிவ
பக்தர்களாகும்நற்போதம்.

8. மாதம்பலமுறைசன் மார்க்கங்களைப்போதிக்கும்
திநில்லீச்சொற்பிரசங்கம்—மேலோர்களைக்கொண்
டோதுவிக்குமின்னற்சங்கம்

9. கன்னல்தண்கழநிசூழ் தென்னிந்தியாவின்வெள்ளக்
கஷ்டநிவாரணநிதி—தனக்குப்பொருண்
மிக்கவுதவினநிதி

10. கந்தன்அடிக்குத்தாசன் சந்தவேலூரில்வாசன்
மைந்தன்லக்ஷ்மணன்சொற்கீதம்—தனையுணர்ந்தா
னந்தங்கொள்ளுவீர்சந்ததம்.

துலங்குசெம்பொன் என்ற மெட்டு.

7. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(பல்லவி.)

கனதனவைசிய இளைஞர்தமிழ்ச்சங்
கம்நீடு வாழ்க வென்று
கந்தன் பொற்பாதம் போற்றுவோம்—மாயூரவடிவேற்
கந்தன் பொற்பாதம் போற்றுவோம். (கன)

(அநுபல்லவி.)

கற்றிருளிற்றெருளி பெற்றிடவுற்றசங்
கம்நீடு வாழ்க வென்று
கந்தன் பொற்பாதம் போற்றுவோம்—மாயூரவடிவேற்
கந்தன் பொற்பாதம போற்றுவோம். (கன)

கானமெய்ஞ்ஞான சுதானவன்பானசங்
கம்நீடு வாழ்கவென்று
கந்தன் பொற்பாதம் போற்றுவோம்—மாயூரவடிவேற்
கந்தன் பொற்பாதம் போற்றுவோம். (கன)

கருத்துளதமிழபிவிருத்தியை நடத்துசங்
கம்நீடு வாழ்கவென்று
கந்தன் பொற்பாதம் போற்றுவோம்—மாயூரவடிவேற்
கந்தன் பொற்பாதம் போற்றுவோம். (கன)

காசினிக்குணேசமிக்க வேசொலிக்கும் பாலர்கள்சங்
கம்நீடு வாழ்கவென்று
கந்தன் பொற்பாதம் போற்றுவோம்—மாயூரவடிவேற்
கந்தன் பொற்பாதம் போற்றுவோம். (கன)

(சரணம்.)

இன்மேயிளைஞர்களினிதுடன் கூடி
சிவகுமரேசனின்றிருவடி நாடி
மனமேவியலக்ஷ்மணன்றமிழ்ப் பாடி
மாநிலமுழுவதும்கிழ்வில்லை தேடி
[ன்றும்
மாண்புபெற்றோங்கக் கொண்டாடி சங்கமெஞ்ஞா
மாண்புபெற்றோங்கக் கொண்டாடி. (கன)

—❧❧—

சடைமறைத்தும்குடமென்ற மெட்டு.

8. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

சீர் பொருந்து மிளைஞர் தமிழ்ச்சங்கங்கண்டு—பர்மா
தேயத்தின்றலைநகரில்தென்பு கொண்டு
பார்பொருந்தும் பற்பலநலஞ்சேர் தொண்டு—செய்யப்
பண்புடன் விழைந்தாருங்களன்பு வுண்டு (சீர்)

சமுகாபிமானந்தேடி—தண்
டமிழபிவிருத்தியைநாடி
குமரனினருள்கொண்டாடி—சற்
குணலக்ஷ்மணன்றமிழ்ப்பாடி.

கோகரு நீதநற்
போதமு டன்றிகழ்

இரங்கோன் தனலைசிய இளைஞர்தமிழ்ச் சங்கத்துக்கு
ஜேய் ஜேய் ஜேய். என்று (சீர்)

—❧❧—

ஶ்ரீஅம்பிகை கீதம்.

புரோவசாமையா என்ற மெட்டு.

9. இராகம் கதனகுதூகலம் தாளம் ஆதி.

(பல்லவி.)

அருளோங்கிய அம்மணிஶ்ரீ
அம்பிகாநின்பாதம்
நம்பினேனெப்போதும் (அரு)

(அநுபல்லவி.)

நிருவாரி பிரியசோதரி
தெண்டிரைக்கடல்சூழ்
மண்டலங்கொண்டாடும் (அரு)

(சரணங்கள்.)

தானவர்கண்மாள சற்சனநல்வானோர்
சேனையின்தலைவன் செந்திவேளையீன்ற
மீனலோசனி வியன்கூடல்ராணி
விரும்புமபேரின்பந்
தரும்பும்மெய்ஞ்ஞானி (அரு)

விளையாரிப்பூவில் புனிதநல்லோர்வாழ்
இனியநல்வேலூர்த் தனயன்லக்ஷ்மணன்
வேண்டினேன்கோரி பாண்டியகுமாரி
வெற்பரசன்செய்த
மெய்த்தவத்தில்வந்த (அரு)

குமரன் கீதங்கள்.

சடைமறைத்துமகுடமென்ற மெட்டு.

10. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

வேலுமயிலோன் வேலுமயிலோன் விந்தைக்காக்ஷி—கண்டு
வேண்டிடின் கிடைக்கும் நற்பேரின்பவாக்ஷி
காலமுழுதுஞ் சூழுவினைகள் தள்ளிமீட்சி—மோக்ஷ
சாகரந்தரவே செந்திற்றங்கும் மாக்ஷி (வே)

தாமகடம்பமாலிநாதன் சீர்
சாருலகம்படைவேதன்
மோக்ஷமுறைந்திடுபாதன் நற்
சிரியலக்ஷ்மண கீதன்
தேவர்கள் முனிவர்கள்
யாவரு மேவிய
காவலனுஞ்செஞ்சேவலனெழில்வடி
வேல் வேல் வேல் (வே)

—❦—

அல்லலறுக்குமடி என்ற மெட்டு.

11. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

சீரார் செந்தூரில் நடி
திருமேவுஞ்சேவற் கொடி
வீறூர் செழுங்கை வடி
வேலாயுதன் பொன்னடி

பணிமனமே
வினையறுமே
தனம்வருமே
கனமுறுமே
நினஞ்சுகமே
அறுதினமே. (சீரா)

ஏரார்செழுங்கமுகி — யெழில்சூழுந்தென்பழநி
தாரார்திருத்தணிகுன் — றாரார்செவ்வேளின்கழல்
பணிமனமே
வினையறுமே
தனம்வருமே
கனமுறுமே
நினஞ்சுகமே
அறுதினமே. (சீரா)

தண்டாமரைப்பிரமன் — வண்டாருந்துளபனரன்
அண்டாதிதேவர்களுங் — கொண்டாடுங்குமரன்பதம்
பணிமனமே
வினையறுமே
தனம்வருமே
கனமுறுமே
நினஞ்சுகமே
அறுதினமே. (சீரா)

திண்டோளவுணர்குலம் — பண்டோர்மையாயழித்து
தொண்டர்க்கருள்புரியுந் — தண்டாயுதன்பதத்தைப்

பணிமனமே
வினையறுமே
தனம்வருமே
கனமுறுமே
நினைஞ்சுகமே
அறநினமே. (சீரா)

கொஞ்சுந்தெய்வானைகுற வஞ்சிமருவுஞ்சிலன்
எஞ்சவில்லாதமலர் விஞ்சைக்குருவின்பொற்றாள்

பணிமனமே வினையறுமே தனம்வருமே
கனமுறுமே நினைஞ்சுகமே அறநினமே. (சீரா)

கந்தாசற் பெருமைவதி நற்பாண்டிவேவுப்பதி
மைந்தன்லக்ஷ்மணான்றுதி கந்தன்பொற்பாதநிதி
பணிமனமே வினையறுமே தனம்வருமே
கனமுறுமே நினைஞ்சுகமே அறநினமே. (சீரா)

—❖—

கண்ணபிரானென்னவே என்ற மெட்டு.

12. இராகம் சேஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

தேங்கடம்பத்தாரணியுஞ்
சேவலங்கொடி வீரா திரு
வாவினங்குடி யூரா அருஞ்
சேவினைப்பழித்த பார்வைத்
தெய்வயானைமாரா. (தேங்)

மாங்குயில்கூவுங்கானதில்
வள்ளிதனைக்கண்டு தினைத்
தெள்ளமுதுமுண்டு மத
வாரணத்தை வரவழைத்து
மணம்புரிந்தாய் பண்டு. (தேங்)

பூரணச்சந்திரவதனு
புகலுமுறைகேளாய் வரு
மிகலறப்பண்ணுளாய் உனைப்
போற்றிடும் பண்ணோற்றுநலம்
புரிகுவாய் திண்டோளா. (தேங்)

மாயுறையும் வாவிகள்சூழ்
வேவுநகர்வாசன் நின்
சேவடியின்தாசன் நன்
மைந்தன் லக்ஷ்மணன் மொழிக்கு
கந்த தன்பிரகாச. (தேங்)

ஓகம்மாகலே ஜோடோடோ என்ற பர்ஸிய வர்ணமெட்டு.

13. இராகம் சங்கராபரணம் தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

வாவா மயில்வேலனே வள்ளிமணவாளனே
தேவா குணசீலனே தேவர்தொழும்பாலனே. (வா)

கார்த்திகைத்தரிசனம் கண்டாலேவிமோசனம்
சீர்த்திபெற்றிடுங்குணம் சேயன்பெறவேதினம். (வா)

மைந்தன்மேலின்னம்வாது வைத்துக்கொள்வதாகாது
கந்தப்பவனிமீது காண்கிதாவிப்போது (வா)

செந்தூர்முருகையனே தேமாமலர்த்துப்பயனே
வந்தாதரிமெய்யனே வண்பன்னிருகையனே (வா)

சித்தர்முத்தர்சுத்தரை நத்துமதியுத்தமன்
பக்தன்லக்ஷ்மணன்றமிழ்ப் பாவினிக்கமேவியே. (வா)

பஹார்கைவி பகார்கைவி என்ற மெட்டு.

14. இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி.

(பல்லவி.)

அம்பிகையீன்ற சண்முகா பழநி
யாண்டவா கு கா.

(அநுபல்லவி.)

சம்ப்ரமமாமயிற் சுகா குமரி
சாம்பவி மகா. (அம்)

(தொஹறு.)

ஆவினன்குடி திருத்தணி பரங்கிரிநகரின்
ஆநந்தவடிவேலனே

சேவலங்கொடியுடைய தீரனேவீரனே
தேவர்பணி பொற்றாளனே

(பல்லவித்தொடர்.)

கந்தனே வந்தருள் தாராய் அடியேன்
கவலையைத் தீராய்.

(தொகையறு.)

கல்லாதஞானமே கைக்கொண்டியானுமுன்
கழலிணைபணிந்து ஏத்தி
பொல்லாத மாயசம்பந்தவினை நீக்கவிப்
புவியிலெஞ்ஞான்றும் வாழ்த்தி

(பல்லவித்தொடர்)

போற்றிடும் லக்ஷ்மணன் கீதம் ஏற்று நீ
போக்குவா யேதம் (அம்)

—※—

முருகன் றிருமால் மருகன் பெருமை என்றமெட்டு.

15. இராகம் அடாணு தாளம் ரூபகம்.

(பல்லவி.)

சீரார்செந்தியூர் வளருங்குமரா எட்டுத்
திக்கிலுள்ளோருங்கும்
பிட்டுக்கொண்டாடுறற் (சீரா)

(அநுபல்லவி.)

ஏரார் கடலாடுங் கரையோரம்
எழில்பொங்கிட மிளிர்மங்கள
குழகாமயி லழகாதருஞ் (சீரா)

(சரணங்கள்.)

சூரர்களின் குல வேரறுத்து எழிற்
றோகைமயில்பிடித்தோனே நிதங்
கோருமடியவர்க் கெல்லாநலனுங்கொ
டுத்துங்காக்கும் நற்சிமானே
பாரிலுனையன்றி வேறெதுமோக்ஷம்
பாலனெனக்கருள்வாய் நின்கடாக்ஷம்
ஆரறிவார்நின் மகிமையின் சூக்ஷம்
அலர்பங்கய ளொளிமங்கிட
இலக்ஷம்புவி படைவீரனே (சீரா)

ஆறுமுகஞ்செவ்வீ ராறுகரந்தோன்ற
அம்பொன்மயின்மிசையேறி தொண்ட
ரண்டர்கொண்டாடுஞ் சண்முகா நற்காக்ஷிதந்
தாள்வாயடிமை யென்னேரில்
நாறுந்தேனூர் தண்டுணர்க்கடம்பாரா
நங்கை தெய்வானை வள்ளிமகிழ்மாரா
கூறுபலக்ஷ்மணன்றமிழ்க்குபகாரா
குறைமதியணி பானிடமறை
புரைசரவண முருகாநறுஞ் (சீரா)

சஞ்சலமாய் நெஞ்சமிக என்ற மெட்டு.

19. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

தேன்கிரிச்சிங்காரவேலன்திருக்காக்ஷி அங்கு
தேவர்களுமூவர்களும் வருமாக்ஷி
செப்பிய மாங்கனிக்குமு
னொப்பிலா மயிலிலேறி
முப்புவியுஞ்சுற்றிவந்த (தேன்)

மான்மகள்தனைப்புணரும் வடிவேலன் முன்
மாரனையெரித்தவானருள்பாலன்
மண்ணையுண் டிடையர்வீட்டில்
வெண்ணைதின்ற நீலமேகக்
கண்ணன் மருகன்கனிந்த (தேன்)

கார்த்திகைத்தினத்திலங்கு கனகோடி ஜனங்
கண்டுதரிசிப்பதற்கு வருந்தேடி
கற்பூரத்திபாராதனை
பொற்புற நடத்திப்பணி
யற்புதத்தொண்டர்கள்சூழுந் (தேன்)

சீர்த்தியுற்ற வேலூநகர் தனில்வாசன் எங்குங்
கீர்த்திபெற்ற மாதன வைசியதாசன்
செந்தமிழ் மகிழ்ந்துசொலும்
மைந்தன் லக்ஷ்மணன்நாளும
னந்தனிலிணைக்குந்திருத் (தேன்)

பார்க்காவடியா நந்தன்றரிசனம் என்ற மெட்டு,

17. இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி.

(பல்லவி)

வேற்கோமுருகாநந்தன் மலரடி
மேவுவாய்நெஞ்சே—செஞ்சுடர் (வேற்)

(அநுபல்லவி.)

வியனுருந்தேன் கிரியானெழிலடி
மேவுவாய்நெஞ்சே—செஞ்சுடர் (வேற்)

(சரணங்கள்,)

கார்த்திகை யோகன்
கருணைப்ர வாகன்
சித்தகை மாதிருபாகன்
திருவுறை யரியின் மாமருகவைபோகன் (வேற்)

மாமயில் வீரன்
மதனகிங் காரன்
தேமா மலரின்மூரன்
செறுதனிலசுரரைச் செகுத்திடு தீரன் (வேற்)

சீலநற் பாண்டி
திகழ்வேவுப் பூண்டி
பாலன் லக்ஷ்மணன்வேண்டிப்
பகர்தமிழ்ழோதியே பவந்துடைத்திடும் வடி (வேற்)

—❀❀—

சுஜன ஜீவனு என்ற மெட்டு.

18. இராகம் கமாஸ் தாளம் ரூபகம்.

(பல்லவி.)

பஜனபூஷணு கொடும் பவநிவாரணு கான (பஜ)

(அநுபல்லவி.)

சுஜனபோஷணு எழில் சுகிர்தலோசனு
தூய சிலகுணலயாகுறத்
தோகையின் மோகனு கான (பஜ)

(சரணங்கள்)

விஜயமாகிவரைகடோறும் விளங்குந்தீரனே
விறல்கொண்மாமுப்புரம்எரித்தவான் குமாரனே
வியன்செந்தூரனே கவின்
மிகு கெம்பீரனே
வினைதீர்த்தருண்
மணியார்கடம்
பணியுதாரனே கான (பஜ)

மானுலாவு கானில்வேடனனை சிங்காரா
மங்களவிலாசநீல மாமயில் வீரா
மறைபினுதாரா சிரைங்
கரனின் சோதரா
மைந்தன்லக்ஷ்மணன்
செந்தமிழுக்கு
கந்தக்ருபாகரா கான (பஜ)

—✤✤—

வனசாக்ஷி என்ற மெட்டு.

19. இராகம் இஸ்துஸ்தான் தோடி தாளம் ஆதி.

(பல்லவி.)

அரசாக்ஷி அருளுறவுறுகிரி (அர)

(அநுபல்லவி.)

அறுமாமுகவாயிற் பெருமானிறைபுரி (அர)

அமிழ்தினுமினியசெந் தமிழ்மொழிக்குகந்தவேள் (அர)

அஞ்சொற்றடவிழி கஞ்சத்துணையடி
செஞ்சொற்குறமகள் வஞ்சிக்குரியவன் (அர)

அன்றநிர்த்தவிட முண்டுநித்தநீல
கண்டனுக்குமறை விண்டசற்குருவின் (அர)

(சரணங்கள்.)

தாளம்மணிமுடி தரித்த சிங்காரன்
சரவணப்பொய்கையிற் ஜனித்தசெம்பிரான்
அருண்மலிவுறுந்திருப் பரங்கிரியூரன்
அண்டபகி
ரண்டம்நவ
கண்டமுங்கொண்
டாடுங்குகன் (அர)

கனதனவைசியர் களிப்புடன்கூடி
கார்த்திகைமகத்துவக் கதிபெறநாடி
மனமொழிமெய்களால் வணங்கிக்கொண்டாடி
வந்துபணி
சுந்தரவா
நந்தவுமை
மைந்தன்றிரு (ஆ)

பலகலையுறைந்திடும் பாரதநேமி
பகுதியிலெழிலுறும் பாண்டியப்பூமி
மலரும்வேவுமாநகர் வதியும்நல்வாமி
மைந்தன்லக்ஷ்ம
ணன்சொலும்நற்
பைந்தமிழ்க்கு
கந்தகந்தன் (ஆ)

—❦—

ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.

20. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(பல்லவி)

காவடிக்காரா உந்தன்
சேவடிதாராய் தேம்பாற் (கா)

(அநுபல்லவி)

மாவடியிற்சரணஞ்செய்தேன் மைந்தன்றனக்கிப்பெரும்
பூவுலகிலுன்னையன்றிப் புகலிடமுண்டோநறும்பாற் (கா)

சேவலங்கொடிவீரனே திருத்தணிமாயூரனே
பாவப்பிறவிக்கடல் தாவும்படிக்கருள்பாற் (கா)

ஆவினன்குடிமுருகா ஆழிதுயின்றோன்மருகா
மேவுந்தமிழாங்கப் பாவலனுப்வந்தநற்பாற் (கா)

பாவைவள்ளிமணாளா பக்தர்தொழுங்குணாளா
தேவர்கொண்டாடுந்திருத் தென்பரங்குன்றாருறும்பாற்(கா)

கூவுங்குயில்பொழில்சூழ் குன்றக்குடிக்குமரா
ஆவலுடன்லக்ஷ்மணான் அன்பார்சங்கீதஞ்சொல்பாற் (கா)

—❀—

தந்தானத்தானனதானன என்ற மெட்டு.

21. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

கந்தாகுகாமயில் வாகன
செந்நாட்குறமாதணை மோகன
கண்ணியனே புண்ணியனே
கந்தங் கமழுடி
சொந்தம் அழகிய
விந்தங் களிநிறை (கந்)

சந்தானப்பெரு நிதியளிசிவன்
மைந்தாசெந்துணர்க்கடம்பணிநறுஞ்
சண்முகனே ஒண்குகனே

சங்கத் தமிழவை
யங்கப் புலவனே
தங்கப் பணிநிறை (கந்)

மூவாநல்வரமுடையவுணர்கள்
மேவாதொழி யறுமுக குருபர
முத்தையா பலவித சித்தையா
மோதும் பலவினை
யேதங் கழிவுறு
பாதந் தனியிணை (கந்)

மாவார்தன் புனனிலவளமிகு
வேலூர்லக்ஷ்மணன்பணிசரவண
மணிக்கடவுளே தென்ப
ழனிக்கடவுளே
வாது எதென்
மீறு ஓது
வஞ்சம் புரிகிர
வஞ்சம் அழிவுற
அஞ்சும் படைவிடு (கந்)

—❧❧—

22. ஸ்ரீ இராகம் தாளம் ஆதி.

(பல்லவி.)

அற்புதக்குமான்வடிவேல் தேவ
ரஞ்சிநின்றசூரர்குலந்
தாஞ்சிடும்படிக்கெழுந்த (அற்)

(சரணுநுபல்லவி.)

பொற்பதத்துணை தேடி
புனிதசங்கீதம் பாடி
நற்பதம்பெற நாடி
நண்புறு மன்பரின்வினை
பண்புற விளைக்குமுயர் (அற்)

விற்புயமன்னர் மண்ணோர்
வேதநெறிசேர் பண்ணோர்
பொற்புமிக்கநல் விண்ணோர்
புகழ்ந்து மனதினின்
மகிழ்ந்து பணிந்திடும் (அற்)

வேலைசூழ்புவி மீது
வீரதாரகன் சூது
கோலமறிந்தப் போது
கொல்லியல் செய்கிரவுஞ்ச
வல்லவெங்குன்றமெரிந்த (அற்)

ஞாலம்புகழும் நிதி
சீலமார்வேவுப் பதி
பாலன்லக்ஷ்மணன் றுதி
பைந்தமிழ்க்கு
கந்தானந்த
சுந்தரமு
டன்றுலங்கும் (அற்)

வேலுமயிலோன் வேலுமயிலோன் என்ற மெட்டு,

23. இராகம் செஞ்சுருட்டி தாளம் ஆதி.

(கண்ணிகள்.)

குமரன் குமரன் குமரன் குமரன் குமரன் பாதம்—நாளுங்
கும்பிட்டுக்கொண்டாடினனம் கைகூடும் போதம்
அமரர் முனிவர் சமரர் போற்றுமஞ் சொல்வேதம்—தந்தைக்
கன்புடனுரைத்த சண்முகன்பொற்கீதம் பாடிக் (கும)

கோதறுவள்ளிமணாளன் — சற்
குணவடியார்க்கநுகூலன்
தீதறுஞானசுசீலன் — எழில்
சேர்மயில்வாகனக்கோலன் — பதம்
போற்றியே லக்ஷ்மணன்
சாற்றிடுந் தண்டமிழ்ப்
புகன்று சிங்காரவடிவேலன் திருவருட்கடாக்ஷத்தாக்கு
ஜெய் ஜெய் ஜெய் என்று (கும)

—※—

பர்மாதேயத்தின் சிறப்புகளையும், இரங்கோன் நகர் விசேஷங்களையும், குறித்துப்பாடியது.

(இஃது புதிதாய்ச்சேர்க்கப்பெற்றது.)

எல்லாந்தெரிந்த இந்து என்ற மெட்டு.

24. இராகம் இந்துஸ்தான்தோடி தாளம் ஆதி.

(பல்லவி.)

சீரார்ந்திலங்கும்பாமா தேசந்தான் — உரை
செய்வேனிரங்கோனல்வி சேஷந்தான் — நறும்
போரார்தனலட்சுமி வாசந்தான் — அதைப்
பேறும்பிரபுக்கள்சந் தோஷந்தான்— (சீரா)

(சரணுநுபல்லவி.)

1. செம்மையார் நற்றுறைமுகத்தின் சீரியல் நன்மாகூதியே
நின்றும்வந்து சேருந்தூர தேசக்கப்பற் காகூதியே
சர்வியாபாரிஸ் — பர்லின்
பெர்வஷியாமோரிஸ்— லண்டன்
ரஷ்வஷியாகிரீஸ் — பல
தேசத்திச் ஜனங்கட்கெல்லாம்
நேசந்தோடு ணவளிக்குஞ்— (சீரா

2. நாடும்பொழுது மாரி பொழியும் நன்மையாரிப்பூமியில்
நானிலத்திலிப்படிக்கெங்கேனுமுண்டோநேமியில்
நண்ணுங்காற்றுகள் —மண்
ணெண்ணெயூற்றுகள் —மலி
நின்கொள்நாற்றுகள் — இந்த

நாட்டினிற் கொப்பாக வெந்த
எட்டிலும் பாட்டிலுமில்லை— (சீரா)

3. நகரிலோர் புறத்திலோா வநிநதியின் தீரமே
நாப்பணுற்ற ராணிதோட்டம் நல்லவோர்சிங்காரமே—பல
காமரோட்டுகள் — உயிர்
க்ஷேமப்பீட்டுகள் — நீதி
நேமக்கோர்ட்டுகள்—புவி
நாயகமெனவே பல
தேயமக்கள்வந்தொளிருஞ்— (சீரா)

4. ஐந்தடுக்குயர்ந்தநல் லழகியமேன் மாடிகள்
அரைக்ஷணத்திற் செல்லவேயமைத்தயந்திரச்சிடிகள்
அரிதிங்கு வறுமை—டேலிபோன்
கருவியின் பெருமை — எலக்ட்ரி
தருதென்ற வருமை — ஒலி
யாடுங்கம்பி யில்லாத்தந்தி
ரேடியோச் சாலையமைந்த— (சீரா)

5. நாட்டுக்கோட்டை நகரமக்கள் நன்கிலங்கும் வீதியே
நாணயம் பொற் காசு வெள்ளி நாளும்வீசுஞ் சோதியே
நறுந் தொழில்தெரிவோர்—சிறு
பெருந் தொழில்புரிவோர்—நலன்
றருந் தொழிலறிவோர் —பல

நன்மக்கள் நிறைந்தொளிருந்
தன்மையை யென்னென்றுசொல்வேன்— (சீரா)

6. ஆறறை மேன்மாடியிலமர்ந்த குமரேசனை
அன்பர்கட்கிரங்கிநல் லருள்தரும்பிரகாசனை
அமரர் சிலனை—சூரர்
சமரிற் காலனை—இளங்
குமரவேலனை —கொண்
டாடியே லக்ஷ்மணன்றமிழ்ப்
பாடியே கண்டுமகிழ்வோம்.— (சீரா)

வாழி.

25. கலி விருத்தம்.

வாழி சீர்க்கயமாமுகன் வேலவன்
வாழி மூவர்கள்மன்னவர் மற்றையோர்
வாழி மாதனவைசிய வாலிபர்
வாழி சங்கம் வளர்கவென்நாளுமே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

முற்றுப்பெற்றது.

பிழையும் திருத்தமும்.

பக்கம்	வரி.	பிழை.	திருத்தம்.
2	17	கோடியாய்பபணங்	கோடியாய்ப்பணங்
7	11	மற்குணவதியும்	வருங்குணவதியும்
11	6	அணிகொழுநதிரா	அணிகொழுந்திரா
13	6	தாதைதனபதியாம	தாதைதனபதியாம்
21	4	முழுமூடி	முழுமுடி
24	11	கிணறுலிங்கம்	கிணறிலிங்கம்
29	2	தாள ரூபகம்	தாளம் ரூபகம்
29	3	ஆறுமுகமானமடி	ஆறுமுகமானவடி
31	5	மருவிற்	மறுவிற்
33	10	நகரில்தென்பு	நகரிற்றென்பு
39	5	துப்பயனே	துப்பினே
47	16	களிநிறை	களினிறை